

கள்ளக்குறிச்சி நகராட்சி, ஏமப்பேர் புறவழிச்சாலை ரவுண்டானா அருகில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கள்ளக்குறிச்சி புதிய புறநகர் பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளார்கள்.

# இன்று - மருதுபாண்டியர்களின் நினைவுநாள்!

## சென்னை – காந்திமண்டப வளாகத்தில் – திருவுருவச் சிலைகளுக்கு – அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை!

**சென்னை, அக். 24- மருது பாண்டியர்களின் நினைவு நாளான இன்று (24.10.2025) காலை 9.30 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள மருது பாண்டியரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.**

விருதுநகர் மாவட்டம், அழகாபுரி முக்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் – பொன்னாத்தாள் தம்பதியினரின் மகன்களாக 1748 ஆம் ஆண்டு பெரிய மருதும், 1753 ஆம் ஆண்டு சின்னமருதும் பிறந்தார்கள்.

மருது பாண்டியர்கள் படைக்கலப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள். அப்போது தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்த உறுதியான ஆற்காடு நாணயத்தைத் தம் கை விரல்களி னால் வளைக்கக்கூடிய வலிமை பெற்றவராக பெரியமருது விளங்கினார். அக்காலத்தில் வளரி என்ற ஆயுதம் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. இவ்வாயுதம் எதிரியைத் தாக்கி வீழ்த்தி விட்டு மீண்டும் எறிந்தவரிடமே திரும்பி வரும் ஆற்றல் வாய்ந்தது. இத்தைகைய பயங்கரமான வளரி ஆயுதத்தைத் திறமையாகப் பயன்படுத்துவதில் மருது பாண்டியர்கள் சிறந்து விளங்கினர்.

இராமநாதபுரம் ஜமீனில் இருந்து பிரிந்து, சிவகங்கைச் சீமை 22.1.1730 அன்று தனியே உருவாயிற்று. அதன் முதல் அரசர் சசிவர்ணத் தேவர். அவருக்குப் பின், அவர் மைந்தர் முத்து வடுகநாதர் என்ற பெரிய உடையத் தேவர் 1750 முதல் 1772 வரை சிவகங்கை மன்னராக விளங்கினார். அவரது மனைவிதான் வீரமங்கை வேலு நாச்சியார். அப்பொழுது, மருதுபாண்டியர்கள் அரண்மனையில் பணியாளர்களாகச் சேர்ந்தனர்.

பெரிய மருது வேட்டையாடுவதில் சூரர். ஒருமுறை முத்துவடுகநாதர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். துணைக்கு மருது சகோதரர்கள் உடன் சென்றிருந்தனர். அப்பொழுது புலியொன்று முத்துவடுகநாதர் மீது பாய்ந்தது. புலியிடமிருந்து மன்னர் முத்து வடுகநாதரைப் பெரிய மருதுவும், சின்ன மருதுவும் காத்தனர். அதனால், முத்துவடுகநாதர் மருது சகோதரர்கள் மீது அன்பு கொண்டு, அவர்களைப் படைத்தளபதிகளாக நியமித்தார்.

வீர தீரச் செயல்களில் சிறந்தவர்களைப், ‘பாண்டியர்’ என அடை மொழியிட்டு அழைப்பது தென் தமிழ்நாட்டில் அந்நாள் வழக்கம். எனவே, வீரத்தில் சிறந்து, தீரச் செயல்கள் புரிந்து வந்த மருது சகோதரர்கள் இருவரும் ‘மருதுபாண்டியர்’ என மக்களால் அழைக்கப்பட்டனர்.

26.5.1772 அன்று ஆற்காடு நவாப்பிற்கு சிவகங்கை மன்னர் கப்பம் செலுத்தாத காரணத்தினால் அவர் மீது ஆங்கிலேயர்கள் போர் தொடுத்தனர். சிவகங்கை நவாப்பின் படைகளும், கம்பெனி படைகளும் சேர்ந்து சிவகங்கை மன்னரைத் தாக்கினர். இப்போரில் மன்னர் முத்து வடுகநாதர் வீர மரணம் அடைந்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு வீரமங்கை ராணி வேலுநாச்சியார், மருதுபாண்டியர்கள், ஐதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் உதவியுடன் சிவகங்கை ஆட்சியைக் கைப்பற்றினார்கள். பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய சுதந்திரப் போராட்டத்திற்கு மாமன்னர்கள் மருதுபாண்டியர்கள் தமது படையைச் சேர்ந்த 500 வீரர்களை அனுப்பி உதவி செய்தார்.

வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆங்கிலேயர்களால் தூக்கி லிடப்பட்ட பிறகு தப்பிப் பிழைத்த வீரர்கள் காளையார்கோவிலில் உள்ள காட்டில் மறைந்து வாழ்ந்தனர். இதனால் ஆங்கிலேயருடன் நேரடிப் போர் என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. மேலும், பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பிய ஊமைத்துரை சின்ன மருதுவின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வந்தார்.

16.6.1801 அன்று சின்ன மருதுவால் ஜம்புத் தீவு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதன் அறிக்கையின் நகல்கள் திருச்சி, திருவரங்கம் ஆகிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன. அதில், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தங்களுக்குள் உள்ள சாதி, மத வேற்றுமையை மறந்து நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஒன்றுபட்டுப் போராட வேண்டும் எனவும், மரணத்திற்கு யாரும் பயப்பட வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆங்கிலேயப் போரின் முடிவில் மருதுபாண்டியர்களைச் சிறைப்பிடிக்க ஆங்கிலேயரால் உத்தரவிடப்பட்டது. 19.10.1801 அன்று சோழபுரம் காட்டில் மருது பாண்டியர்கள் சிறைப் பிடி க்கப்பட்ட பின்னர், 24.10.1801 அன்று அவர்கள் இருவரும் தூக்கிலிடப் பட்டனர்.

மருது பாண்டியர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் தமிழ்நாடு அரசு சார்பில், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் மருது பாண்டியர்களின் திருவுருவச் சிலைகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 14.2.2023 அன்று திறந்து வைக்கப்பட்டன. ஆண்டுதோறும் அக்டோபர் 24 ஆம் நாள் மருது பாண்டியர்களின் நினைவு நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் மருதுபாண்டியர் நினைவு நாளான இன்று (24.10.2025) காலை 9.30 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலைகள் அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

---

### வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை- செஞ்சி பேரூராட்சி அலுவலகத்தில்

# தயார் நிலையில் - மீட்பு உபகரணப் பொருட்கள்!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆய்வு!

*செஞ்சி, அக். 24 -* வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மற்றும் சுற்றுபுறபகுதிகளில் புயல், வெள்ளம், மற்றும் கன மழை எச்சரிக்கையொட்டி செஞ்சிபேரூராட்சி சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக செஞ்சி பேரூராட்சியில் கனமழையால் பாதிக்கப் படுபவர்களை உடனடியாக மீட்கும் வகையிலும், மழையினால் ஏற்படும் இடர்பாடுகளை சீர் செய்வதற்கு தேவையான உபகரணப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் கனமழை பெய்து வருவதால் அலுவலக பணியாளர்கள், மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோர்செஞ்சி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தாழ்வான பகுதியில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றுவதற்கான பணிகளில்உடனடியாக ஈடுபட வேண்டும் ,மழைநீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டால் அதை கண்டறிந்து உடனடியாக சீர் செய்ய வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.


இதில்செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,துணை சேர்மன் ராஜலட்சுமி செயல்மணி,நகர செயலாளர் கார்த்திக்,பேரூராட்சி உதவி பொறியாளர் சுப்பிரமணியன்,துப்புரவு அலுவலர் ராஜா, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார்,செந்தில் முருகன்,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்,அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் பஸ் நிறுத்தம் குடியிருப்பு பகுதியில் தேங்கிய மழை நீரை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பார்வையிட்டு உடனடியாக வெளியேற்றுவதற்கு உத்தரவிட்டார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், நெடுஞ்சாலைத்துறை செஞ்சி உட்கோட்ட செயற்பொறியாளர் அக்பர் அலி,வட்டாட்சியர் துரைச்செல்வன், ஒன்றிய கவுன்சிலர் டிலைட், ஊராட்சி மன்ற தலைவர் அபர்ணா ரவிசங்கர், உதவி பொறியாளர் விஷ்ணு பிரியா உள்ளனர்.

# இந்திய ஒன்றியத்தின் “காலனி” (COLONY) அல்ல தமிழ்நாடு!

**பொன். முத்துராமலிங்கம்**
*முன்னாள் அமைச்சர் - கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்*



இந்திய நிலப்பரப்பின் புவியியல் அமைப்பும் இங்கு வாழும் மக்களின் வேறுபட்ட தாய்மொழிகளும், பண்பாட்டுக் கூறுகளின் வேறுபாடுகளும், இந்திய நிலப்பரப்பு ஒன்றாக இருப்பினும், இந்த நிலப்பரப்பு பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு துணைக்கண்டம் என்பதுதான் வரலாற்று அறிஞர்களின் தீர்க்கமானதும், தெளிவானதுமான முடிவாகும்.

ஆங்கிலேயரின் நிர்வாக வசதிக்காக இந்தியாவை ஒரு நாடு எனக்கருதும் வகையில் நிர்வாக அமைப்புகளை ஓரிடத்தில் குவித்தனர். அப்படிக் குவிக்கப்பட்ட அந்த மையம் ஆங்கிலேயரின் வசமிருந்த இந்திய நிலப்பரப்பு முழு மைக்கும் ஆட்சித் தலைநகரமானது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், அவர்களின் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட இந்திய நிலப்பரப்பு முழுவதும் “ஒரே நாடு” என்பதற்கான வரலாற்றுப் பிரதிபலிப்பு அல்ல. மாறாக, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திய நிர்வாகத்திற்கான ஏற்பாடு மட்டும்தான்.

இந்திய எல்லைப் பகுதியை ஒட்டிய பர்மா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகள் இந்தியாவிலிருந்து பிரிக்கப்படுவதற்கு முன்னரும் அல்லது பிரிக்கப்பட்ட பின்னரும் இந்தப் பகுதி “இந்தியா” என்றுதான் குறிப்பிடப்படுகிறது. எனவே, இந்தியா என்ற நிலப்பரப்பின் எல்லைகளும் நிரந்தரமாக இருந்ததில்லை என்பதைக் கடந்தகால வரலாறு நிரூபித்துக் காட்டுகிறது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் இந்தியாவிற்கு ஆங்கிலேயர்கள் விடுதலை வழங்கிய காலக்கட்டத்தில் இஸ்லாமியர்களுக்கு பாகிஸ்தானத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டுதான், இந்தியாவிற்கு சுதந்திரத்தை வழங்கினார்கள். சுதந்திரம் வழங்கப்பட்ட பாகிஸ்தானப் பகுதிகூட பின்னாளில் வங்காளதேசமாகவும், பாகிஸ்தானமாகவும் மொழியின் அடிப்படையில் இரண்டாகப் பிரிந்து, இரண்டு நாடுகளாகியன என்பது கடந்தகால வரலாறு.

எஞ்சியுள்ள இந்திய நிலப்பரப்பில் பல்வேறு தேசிய இனங்கள் தொன்றுதொட்டு பல்லாயிரம் ஆண்டுகாலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மை அன்றைய தேசியத் தலைவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப்பெற்ற காலகட்டத்திலேயே திராவிட நாடு கோரிக்கையும் வடகிழக்கு மாநில மக்களின் தனி நாடு கோரிக்கையும் தொடர்புடைய இனமக்களால் எழுப்பப்பட்டு வந்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது. இந்தப் பிரிவினை முழக்கங்களை சரிகட்டும் நோக்கில்தான் மொழிவாரி மாநிலங்கள் 1956ல் உருவாக்கப்பட்டது. மொழிவாரி மாநிலங்கள் இந்திய ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்தி மொழிதான் இந்திய ஒன்றியத்தினுடைய ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற அரசியல் சட்டத்தினுடைய நிபந்தனை இன்றுவரை ரத்து செய்யப்படவில்லை.

மேலும், மொழிப் பிரச்சனையில் ஒன்றிய அரசு இன்று வரை தீர்க்கமான எந்த முடிவையும் எடுக்கவில்லை. இந்திய ஒன்றியத்தின் இன்றைய ஒற்றுமை என்பது இந்திய விடுதலைக்கானப் போராட்டத்தில் அனைத்து மக்களும் வேறுபாடுகளை மறந்துவிட்டு ஆங்கிலேயருக்கு எதிரான தன் எழுச்சியினை மையமாகக் கொண்ட ஒற்றுமைதான் என்பதை, இந்திய ஒன்றியத்தின் முதல் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைப் பற்றி குறிப்பிடும் பொழுது ஒன்றுபட்ட மக்கள் எழுச்சியின் உணர்வால் உண்டான ஒற்றுமை தான் (Emotional Integration) என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப் பெற்ற பின்னரும் கூட ஹைதராபாத் நிஜாம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியும் திருவிதாங்கூர் கொச்சின் அரசராட்சிக்கு உட்பட்ட பகுதியும் தனி நாடுகளாக செயல்படத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கியநாடுகள் மன்றத்திலேயே (UNO) முன்வைத்தார்கள் என்பது முந்தைய வரலாறு. பின்னர், இந்த பகுதிகளெல்லாம் ராணுவ நடவடிக்கைகள் மூலமாகவும், பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தான் ஒன்றிணைக்கப்பட்டன.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியை அடித்தளமாகக் கொண்ட சமூகஅரசியல் சூழ்நிலையில்தான் இந்திய அரசியல் சட்டம் (Constitution of India). உருவாக்கப்பட்டது.

எனவேதான், இந்திய அரசியல் சட்ட நிர்ணய சபையில் (Constituent Assemble) அன்றைய தினம் பங்கு பெற்ற மூத்த தேசியத் தலைவர்கள் மாநிலங்கள் முழுமையான சுயாட்சி அதிகாரங்களைப் பெற்ற மாநில அரசுகளாகவும், ராணுவம், தகவல்தொடர்பு, போன்ற நிறுவனங்களையும், வெளிநாட்டுக் கொள்கைகளையும் நிர்வகிக்கக்கூடிய சில குறிப்பிட்ட அதிகாரங்களை மட்டும் தன்வசம் வைத்திருக்கக்கூடிய ஒன்றிய அரசாக இருக்க வேண்டுமென கருதினார்கள். இந்தக் கருத்தினை இன்னும் தெளிவாக குறிப்பிட வேண்டுமேயானால் “மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்ற முறை இந்திய அரசியல் சட்ட நிர்ணய சபையிலேயே வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்திய அரசியல் சட்ட வரைவு விவாதங்களைப் படிக்கின்றவர்களால் புரிந்து கொள்ள இயலும்.

இந்திய அரசியல் சட்டத்தை வார்ப்பிக்கும் குழு 1946 டிசம்பர் 13ஆம் தேதியே அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்தக் குழுவின் விவாதங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில்தான் “பாகிஸ்தான்” பிரிவினைக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஒத்துக்கொள்கிறது. இந்தப் பிரிவினையால் உருவான “அச்சம்தான்” இந்திய தேசியத் தலைவர்களையும், அரசியல் சட்ட நிர்ணயக் குழு உறுப்பினர்களையும், கூட்டாட்சி (Federal Structure) முறையிலிருந்து திசைமாற்ற முழுமையான கூட்டாட்சியாகவும் இல்லாமல், ஒருங்கமைந்த (Unitary Structure) ஆட்சியாகவுமில்லாமல், ஓர் அரசியல் இலக்கணமில்லா ஆட்சிமுறையை சமரச ஏற்பாடாக உருவாக்கினார்கள்.

இதனால் உருவான குழப்பத்தின் விளைவாக, ஒன்றிய அரசு பெரும்பாலான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், மாநிலங்கள் அத்தியாவசியமான அதிகாரங்களை இழப்பதற்குமான சூழ்நிலை உருவானது. எதிர்காலத்தில் மாநிலங்களுக்கு உருவாகும் சில தடைகள், சங்கடங்கள் பற்றி அரசியல் சட்ட நிர்ணய சபை ஆழ்ந்து தொலைநோக்குடன் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இந்த சூழ்நிலை குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் பொழுது நாடு விடுதலைப் பெற்ற வெற்றிக் களிப்பில் அரசியல் சட்ட வரைவில் சில முக்கிய அம்சங்களை ஆழ்ந்து பரிசீலிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்

(Constitution was framed when the Constituent Assembly was in a jubilant mood).

அத்தகைய முக்கிய அம்சங்களில் முக்கியமானதாகக் கருதப்படுவது “மாநில ஆளுநர்கள் ”கல்வி குறித்த அதிகாரம்” ஆகும். இந்திய ஒன்றியம் (India is Union of States) ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்ட சூழ்நிலையில், கொள்கை வேறுபாடுகளின் அடிப்படையில் பல அரசியல் கட்சிகள் உருவாவதை தடுக்கவியலாது. அப்படித்தான் இந்தியாவில் பல அரசியல் கட்சிகள் உருவாக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கும் அரசியல் கட்சிதான் மாநிலங்களிலும் ஆட்சிகளை அமைக்கும் என்று அறுதியிட்டுக் கூறவியலாது. ஒன்றியத்தில் ஒரு அரசியல் கட்சியும், மாநிலங்களில் வேறுகட்சிகளும் ஆட்சிகளை அமைக்கும் வாய்ப்பு இயல்பாகவே ஜனநாயக தேர்தல் முறையில் உருவாகும். அப்படிப்பட்ட வரலாறு இந்தியாவிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் மாநில ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசிற்கு இருக்கிறது. ஒன்றியத்தில் ஆட்சி அமைத்திருக்கும் கட்சிக்கு, எதிரான கோட்பாடுகளை உள்ளடக்கிய அரசியல் கட்சி மாநில ஆட்சியைக் கைப்பற்றி, ஆட்சியை நடத்துகின்ற பொழுது, ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற அத்தாரத்தை முறை கேடாகப் பயன்படுத்தி, மாநில அரசுகளின் நடவடிக்கைகளுக்குத் தடையாக இருந்துவருவதை இன்று இந்தியக் குடிமக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் ஆகிய எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்கின்ற மாநிலங்களில் பொறுப்பில் இருக்கும் ஆளுநர்கள், மாநில அரசுகளுக்கு முற்றிலும் முரண்பாடாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக தமிழ்நாடு ஆளுநர் ரவி, உச்சநீதிமன்ற தீர்ப்பைக்கூட ஏற்றுக்கொண்டு செயல்படுவதில்லை. ஆளுநர் ரவி, தமிழ்நாட்டில் ஒரு தனி அரசாங்கமாக ஒன்றிய அரசின் முழுமையான ஆதரவுடன் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமை ஒன்றிய ஆளுங்கட்சிக்கு ஆதரவான கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் இல்லை என்பதுதான் எதார்த்த நிலைமை. இதுமட்டுமல்ல, மாநில பட்டியலில் இருந்த “கல்வி” தொடர்பான அதிகாரம் ஒப்புமைப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டம் அமல்படுத்தப்பட்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்னும் இந்த இக்கட்டான பிரச்சினைகளுக்கான விடியல் தெரியவில்லை.

தமிழ்நாட்டின் முதல்வரும் திராவிட மாடல் ஆட்சியின் முன்னோடியுமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் தொடர்ந்து இந்த அவலங்களை பொதுவெளிக்கு கொண்டு வந்து தீர்வுகாண பெரும் முயற்சியை மேற்கொண்டுவருகிறார். இந்த முயற்சியைத் தடுக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க அரசும், அந்த ஆட்சிக்கு ஆலோசனைகளை வழங்கிடும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் எடுத்துவரும் முயற்சிகளும், உருவாக்கும் தடைகளும் ஏராளம், எண்ணிலடங்காதது.

இத்தகைய முயற்சிகளை ஒன்றிய அரசும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் மேற்கொண்டாலும் தமிழக முதல்வர் தயங்கப்போவதில்லை. அனைத்து உரிமைகளையும் பெற்ற தமிழ்நாடாகத் தான் இருக்கவேண்டுமே அல்லாமல், ஒன்றிய அரசின் “காலனியாக” என்றும் தமிழ்நாடு இருக்காது என்பதில் அவர் உறுதியுடன் பணியாற்றி வருகிறார். விளைவுகளைப்பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை.

இந்திய அரசியல் சட்டம் மக்களால் உருவாக்கப்பட்டது எனில், அந்த மக்கள் சக்தியை இந்திய ஒன்றியம் முழுவதும் ஒன்றுதிரட்டி மாநில மக்களும், முழுச்சுதந்திரத்துடனும், உரிமைகளோடும் எதிர்கால சமூகப்பொருளாதார அரசியல் வாழ்க்கையை மகிழ்ச்சியுமாக அமைத்திட தமிழ்நாட்டின் முதல்வர்மேற்கொள்ளும்அனைத்துமுயற்சிகளுக்கும் சர்வபரிதியாகத்தை காணிக்கையாக்குவோம். ஆம்!

**மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி**
**அடைந்தே தீருவோம் தடைகளைத் தகர்ப்போம்!**



கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், ஈரியூர் கிராமத்தில் சிலிண்டரில் ஏற்பட்ட எரிவாயு கசிவின் காரணமாக வீடு தீப்பிடித்த விபத்தில் உயிரிழந்த, கணவன் மனைவி பொன்னுசாமி மற்றும் அனுசுயா ஆகியோரின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.6 லட்சம் வழங்க உத்தரவு பிறப்பித்ததை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ரூ.6 லட்சத்திற்கான காசோலையினை நேரில் சென்று வழங்கி தனது இரங்கலை தெரிவித்து ஆறுதல் கூறினார், அப்போது ஒன்றிய குழு பெருந் தலைவர், ஒன்றிய கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உடன் இருந்தனர்.